புகைப்படம்

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை 600 113

## ஆய்வுத்திட்ட உதவித்தொகைக்கான விண்ணப்பப் படிவம்

## ____________ ஆண்டிற்கான ஆய்வுத்திட்ட முன்மொழிவு

| | | | |
|---|---|---|---|
| **1.** | பெயர் | **(தமிழில்)** | |
| | | **(ஆங்கிலத்தில்)** | |
| **2.** | **பிறந்த நாளும் வயதும்** | | |
| **3.** | **கல்வித் தகுதி** | | |
| **4.** | முகவரி<br>அலுவலகம் (தொலைபேசி எண்ணுடன்) | | |
| | **இல்லம் (தொலைபேசி எண்ணுடன்)** | | |
| **5.** | செல்பேசி | | |
| **6.** | **மின்னஞ்சல்** | | |
| **7.** | முறைவழி விண்ணப்பிக்கும் நிறுவன முகவரி | | |
| | அரசுசாரா நிறுவனமாயின் பதிவு எண்ணைக் குறிப்பிடவும் | | |
| **8.** | ஆய்வுத்திட்டத் தலைப்பு | | |
| **9.** | எதிர்பார்க்கும் மொத்தச் செலவினம் | | |
| **10.** | **இணைப்புகள்** | | |
| | **i.** ஆய்வுச்சுருக்கம் (3 பக்கங்கள்)<br>**ii.** செலவின வகைப்பாடு<br>**iii.** விரிவான தன்விவரக் குறிப்பு<br>(i) முன் ஆய்வு விவரங்கள்<br>(ii) நூல் வெளியீடுகள்<br>(iii) பணி அனுபவம்<br>(iv) ஆய்வுச் சாதனை | | |

**நாள்:**

**இடம்:** **கையொப்பம்**

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

## ஆய்வுத்திட்டங்கள் - உதவித்தொகை

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு உட்பட்ட செவ்வியல் இலக்கண இலக்கிய நூல்கள், பிற வரலாற்றுத் தொல்லியல் தரவுகளைக் களனாகக் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆய்வில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் பெருந்திட்டங்கள் மற்றும் துறைப்பணிகள் ஆகியவற்றிற்குத் துணைநிற்கும் வண்ணமும், செம்மொழித் தமிழாய்வின் வளர்ச்சிக்கு உதவுமாறும் **ஆய்வுத்திட்டங்கள்** என்ற அமைப்பு உருவாக்கப்பெற்றுள்ளது. நிறுவனச் செயல்வட்டத்திற்கு வெளியே அமையும் மூத்த ஆய்வறிஞரையும் ஆய்வு நிறுவனங்களையும் அந்நிறுவன ஆய்வு அலுவலரையும் அரசுசாரா நிறுவனம்வழி ஈடுபட விழையும் ஆய்வு வல்லுநரையும் பயன்கொண்டு செம்மொழித் தமிழாய்வுக்கு வளர்ச்சி நல்குவதற்காக இந்த ஆய்வுத்திட்டங்கள் வழங்கப்பெறுகின்றன. பெரும்பாலும் ஓராண்டுக்கால அளவும் ரூ. 2.5 இலட்சம் நல்கையுமாக இது அமையும். இரண்டு அல்லது மூன்றாண்டுகட்குரிய பெருந்திட்டங்கள் கூடுதல் நல்கையுடன் அருகி அமைய வாய்ப்புண்டு.

விண்ணப்பங்கள் ஆண்டுதோறும் பெறப்பட்டுத் தெரிவு செய்யப்பெறும்; இவ் விண்ணப்பங்களை வழங்கிய ஆய்வு வல்லுநர், இதற்கென அமைந்த தேர்வுக் குழுவினர் முன் தம் ஆய்வுத்திட்ட முன்வரைவை நேரில் வழங்க அழைக்கப்பெறுவர்; தகுதியான ஆய்வுத்திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று, உரிய நெறிமுறைகளுடன் நிதியுதவி வழங்கப்பெறும். முதன்மை ஆய்வாளர், பணியில் இல்லாத நிலையில் மட்டுமே மதிப்பூதியம் பெற இயலும்.

ஆய்வுத்திட்ட விண்ணப்பங்கள், முகப்புக் கடிதம், **ஆய்வுத்** தலைப்பும் **சுருக்கமும்** (3 பக்க அளவில் உரிய விளக்கம், முன்னாய்வுகள், நூற்றொகையுடன்), விண்ணப்பிப்பவரின் **விரிவான தன்விளக்கம்** (பட்டம் பெற்ற ஆய்வுத்தலைப்புகள், நிறைவேற்றிய ஆய்வுத்திட்டங்கள், வெளியிட்ட நூல்கள் / ஆய்வுக்கட்டுரைகள், தற்போது செய்துவரும் திட்டம் ஆகியவை தொடர்பான தரவுகளுடன்**)**, **எதிர்நோக்கும் திட்டச் செலவின வரைவு** (காண்க: **மாதிரி**) ஆகியவற்றுடன் அனுப்பப்பெற வேண்டும். **பணியில் இருப்பவர் தம் விண்ணப்பத்தை முறைவழிப்பணிந்து அனுப்புதல் வேண்டும். அரசு சாரா நிறுவனமாயின், www.ngo.india.gov.in என்ற இணையத்தில் பதிவு செய்த எண்ணை விண்ணப்படிவத்தில் குறிப்பிட்டு உரிய ஆவணங்களை இணைக்கவேண்டும்.** (காண்க:**விண்ணப்பப் படிவம்**) விண்ணப்பம், **இருபடிகள்**, முறைவழிப் பணிந்து, ***இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சாலைப்போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை 600 113*** என்ற முகவரிக்கு அனுப்பப்பெறவேண்டும்.